செ.வெ.எண்: 203

# பத்திரிகை செய்தி

நாள்: 17/03/2017

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள அனைத்து குடும்ப அட்டைதாரர்கள் அனைவரின் ஆதார் அட்டையில் உள்ள முகவரி மட்டும் தான் நடைமுறைபடுத்தப்படவுள்ள ஸ்மார்ட் அட்டையில் பதிவாகும். எனவே ஆதார் அட்டையில் சரியான முகவரி இல்லாத குடும்ப அட்டைதாரர்கள் சரியான முகவரி விபரம் ஸ்மார்ட் அட்டையில் வரவேண்டும் எனில், www.tnpds.com என்ற இணையதளத்தில் உள்ள பயனாளர் நுழைவு இடத்தில் கிளிக் செய்தால் குடும்ப அட்டைதாரர்களின் அலைபேசி எண் கேட்கும். ஏற்கனவே குடும்ப அட்டைதாரர்கள் நியாயவிலைக் கடையில் பதிவு செய்த கைபேசி எண்ணை அதில் பதிவு செய்தால் பயனாளர் கைபேசிக்கு ஒரு OTP நம்பர் வரும். அதை பதிவு செய்தால் குடும்ப அட்டைதாரரின் குடும்ப அட்டை பற்றிய விபரம் வரும். அதில் முகவரி என்ற இடத்தை கிளிக் செய்தால் ஆதார் அட்டை முகவரி அதில் இருக்கும். அதன் பக்கத்தில் புதிய முகவரி பதிவு செய்கிற வசதி இருக்கும். அதில் குடும்ப அட்டைதாரர்கள் புதிய முகவரி விபரத்தை பதிவு செய்தால் ஸ்மார்ட் அட்டையில் குடும்ப அட்டைதாரர்களின் புது முகவரி விபரம் பதிவாகும். எனவே அனைத்து குடும்ப அட்டைதாரர்கள் உடனடியாக முகவரியை சரிபார்த்து இணையதள முகவரியில் பதிவு செய்து பயனடையுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்துக் கொள்கிறார்.

ஒம்/-சஜ்ஜன்சிங் ஆர்.சவான்
மாவட்ட ஆட்சித்தலைவர்,
கன்னியாகுமரி மாவட்டம்,
(இ)நாகர்கோவில்.

உண்மை நகல் / உத்தரவுப்படி

16/3/17

மாவட்ட ஆட்சியருக்காக

வெளியீடு:
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
நாகர்கோவில்

16/3/17